**தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டசெயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று கேகாலை மாவட்ட செயலகத்திற்கு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக குறிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) கேகாலை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

1.6 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.6.1 **நிதி செயலாற்றல்கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தர்கருத்துரை** |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றிற்கு உட்படுத்த வேண்டிய புள்ளி விபரங்கள் திறைசேரி இறுதி நிதிக் கூற்றின்புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதும், கீழ் குறிப்பிடப்படும் சந்தர்பங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (i) திறைசேரி இறுதி நிதிக் கூற்று பிரகாரம் முற்பண பெறுவனவு | | |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 57,032,719ஆன போதும், நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 17,178,885 கூடுதலாக ரூபா 74,211,604எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ii) | திறைசேரி இறுதி நிதிக் கூற்று பிரகாரம் முற்பண கொடுப்பனவு ரூபா 70,671,643 ஆன போதும், நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 32,731,198 கூடுதலாக ரூபா 103,402,841 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதி செயலாற்றல் கூற்றில் பிரதான பேரேட்டு செலவினமாக வருமானத்திலிருந்து மீள்பெறல் ரூபா 45,422,897 மற்றும் கட்டுநிதியாக ரூபா 1,044,423 குறிப்பிடப்பட்ட போதும், அக்குறிப்பு மேல் குறிப்பிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கையிற்கு இணங்காதிருந்தது. | பொது நிதி சுற்றறிக்கை பிரகாரம் கணக்குப் பதிவிட வேண்டியமை. | ஏற்றுக்கொள்கிறேன். |

1.6.2 **நிதி நிலைமைக் கூற்று**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோத்தர்கருத்துரை** |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.3 பந்தி பிரகாரம் நிதிசாரா சொத்துக்கள் பிரதான பேரேட்டு மீதியுடன் இணங்கக் கூடிய வகையில் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிட வேண்டியிருந்த போதும், பிரதான பேரேட்டு கணக்கின் படி நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,361,235,202 ஆன போதும் அது ரூபா 80,164,862 இனால்குறைத்து ரூபா 1,281,070,340 ஆகநிதி நிலைமை | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்க பொது நிதி சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |

தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1.6.3 **நிதிப் பாய்சல் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோத்தர்கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பௌதீக சொத்துக்கள் விற்பனையினால் கிடைத்த ரூபா 177,307 இனை முதலீட்டு நடவடிக்கைகளுடன் கூடிய நிதிப் பாய்சலின் கீழ் குறிப்பிடாது செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் கூடிய நிதிப் பாய்சலில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்க பொது நிதி சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணத்தின் கீழ் ரூபா 32,813,169 ஆன கடன் தவணை பெறுவனவு மற்றும ்ரூபா 57,214,426 ஆன கடன் கொடுப்பனவு முதலீட்டு நடவடிக்கைகளுடன் கூடிய தேறிய நிதிப் பாய்சலிற்கு உட்படும் வகையில் நிதிப் பாய்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்க பொது நிதி சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |
| (இ) | மீளாய்வாண்டில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம், கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதலின் கீழான ரூபா 130,116,088 ஆன செலவு, முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் செலவிடப்பட்ட நிதிப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | -மேல் குறிப்பிட்டவாறு- | ஏற்றுக்கொள்கிறேன் |

### 1.6.4 சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பம் கீழே விபரித்து காட்டப்படுகிறது.

| **அவதானிப்புகள்** | | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| 2011 இன் 46 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2010 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | சட்டத்தின் 34 பிரிவின் பிரகாரம் வயல் காணிகள் விவசாய பயிர் செய்கை தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாத போதும், வயல் காணி ஒன்றை நிறைத்து மாவனல்லை பிரதேச செயலகப் பிரிவில் மடுள்போவ விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டு நிலவியது | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | இவ் விளையாட்டு மைதானம் புதிய விளையாட்டு மைதானம் ஒன்றல்லாததுடன், ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டினை பயன்படுத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகவும் அது வயல் காணியில் அமைந்திருந்தால் அதை தரைக் காணியாக கருதி நடவடிக்கை எடுக்க தேவையான அனுமதியை கமநல உதவி ஆணையாளறின் மூலம் பெற்றுக் கொள்ள பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது |

### 1.6.5 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரி தேவைப்பாடுகளுடன் இணங்காத முறையில் செயற்பட்ட சந்தர்ப்பம் கீழே காட்டப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர்கருத்துரை |
| --- | --- | --- |
| ஓப்பந்தக்காரர்கள் தொடர்சியாக வரி செலுத்துனர்கள் என உறுதிப்படுத்தும் தூய்மைப்படுத்தல் சான்றிதழினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளாது கூட்டுத் தொகை ரூபா 3.67 மில்லியன் ஆன பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப் பணம் மூன்று ஓப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சேர்க்கப்பட்ட பெறுமதி மீது வரி செலுத்த முன்னர தொடர்சியான வரி செலுத்துனர் என உறுதிப்படுத்திக் கொள்ள தூய்மைப்படுத்தல் சான்றிதழினை பெற்றுக் கொள்ள வேண்டியமை. | இவ்வாண்டிலிருந்து அவ்வாறான உறுதிப்படுத்தல் ஒன்றினை (மிகக் கிட்டிய காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட) கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென உரிய விடய பொறுப்பு அலுவலர்களை அறிவூட்டியதுடன் 2018 ஆம் ஆண்டு கொடுப்பனவு தொடர்பான தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப தேவையான அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. |

### 1.6.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) போதியஅதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
| --- | --- | --- |
| தெஹிஓவிட பிரதேச செயலக மாகம்மன கடை வளைவு பாதையிற்கு கொன்கிரீட் இட ரூபா 1.48 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.அவ்வாறு இருப்பினும் ஒதுக்கீடு வழங்கப்பட்ட பாதைக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் ஒப்பந்தம் வேரொறு பாதையை கொன்கிரீட் இட பயன்படுத்தப்பட்டிருந்ததனால் குறித்த பாதை நிர்மாணத்தை பௌதீக ரீதியாக பரீட்சிக்க | முறையாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை மாற்றுவது உரிய அதிகாரத்துடன் செய்ய வேண்டியமை. | மேல் இரண்டு பாதைகளையும் மாகம்மன கடை வளைவு பாதை மற்றும் மாகம்மன கடை வளைவு பக்கத்தினால் எகொட கிராமத்திற்கு செல்லும் பாதை என அறிய முடியும். இதை அங்கீகரித்த 2 கருத்திட்டங்களிற்காக வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 2 இற்கமைய வெவ்வேறாக |

| | | |
|---|---|---|
| முடியாதிருந்தது. | | கைசாத்திடப்பட்ட 2 ஒப்பந்தங்களிற்கமைய செயற்படுத்தப்பட்ட 2 கருத்திட்டமென தெஹிஓவிட பிரதேச செயலாளர் அறிக்கையிட்டுள்ளார். இக் கருத்திட்டங்கள் தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள சபையொன்று நியமிக்கப்பட்டதுடன், குறித்த அறிக்கை கிடைத்ததுடன் முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**(ஆ) அங்கிகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| (i) உள்நாட்டலுவல்கள் மற்றும் வட மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீட்டின் கீழ் ருவன்வெல்ல கலாசார மத்திய நிலைய மேல் மாடி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள கிராம அபிவிருத்தி சங்கமொன்றுடன் ரூபா 850,230 மதிப்பீடான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந் நிர்மாண வேலைகளை பௌதீக ரீதியாக பரீட்சிக்கையில் மேல் மாடி அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக மத்திய நிலையத்திற்கு அண்மித்த அறை பகுதியொன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 825,466 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்த பிரகாரம் ஒப்பந்தத்தை கையேற்க நடவடிக்கை வேண்டியமை மற்றும் அதற்கு மாற்றமாக செயற்பட்டிருந்தால் கொடுப்பனவு செய்யாமை, அவ்வாறுகொடுப்பனவு செய்திருந்தால் உரிய தரப்பினரிடமிருந்து அத் தொகையை அறவிட வேண்டியமை. | முன்னால் மதிப்பீடு தயாரிக்கையில் கருத்திட்டததுடனான தவறொன்று ஏற்படுமிடத்து தாமதமின்றி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், ஒப்பந்தம் கைச்சாத்திடுகையில் சரியான பெயரை குறிப்பிடுமாறும் பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஏற்றுமதி விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்வாதாரத்தை உயத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேளைத்திட்டத்தின் கீழ் தெஹிஓவிட பிரதேச செயலக பிரிவின் எபலபிடிய 40 வீடுகள் அழுத்வளவ்வ பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,000,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அப்பாதை ஏற்றுமதி பயிர் அனர்த்தத்துடன் தொடர்புபடாத இரண்டு நபர்களுக்கு சொந்தமானதென களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இதன் படி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை அடைந்து கொள்ளும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் ‘‘ஏதாவதொரு கொள்கையின் பிரகாரம் தற்போது ஒப்படைக்கப்பட்டிருந்தால் அன்றி பிரதான பாதைகள் அல்லாத ஏதேனும் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏனைய அனைத்து பாதைகளும் அப்பிரதேசத்தின் பிரதேச சபைக்கு சொந்தமானதாக கருத வேண்டும்.’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பதியப்படாத போதும், அப்பாதை பிரதேச சபைக்கு சொந்தமானதாகும். அது போன்று அப் பாதை 11 குடும்பங்களுக்கு நேரடியாக பிரவேச வசதிகளை வழங்குகின்றது. இக் கருத்திட்ட முன்மொழிவு மக்கள் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஏனைய 25 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்களினால் அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொள்ள மற்றும் மூலதன உபகரணங்களின் கொள்வனவிற்காக முறையே ரூபா 8,395.19 மில்லியன் மற்றும் ரூபா 29.09 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியில் அவற்றில் முறையே ரூபா 5,620.86 மில்லியன் மற்றும் ரூபா 2.38 மில்லியன் ஒதுக்கீடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. அது கருத்திட்டங்களிற்கு வழங்கிய ஒதுக்கீட்டின 0.4 முதல் 91.7 சதவீத வீச்சலவில் நிலவின. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மேற்கொள்ள உத்தேசிக்கின்ற கருத்திட்டங்களை கால நேரத்துடன் பெற்றுக் கொண்டு அக் கருத்திட்டங்களை மேற்கொள்ள திட்டமிட வேண்டியமை. | கருத்திட்டங்களை மேற்கொள்ள முடியாமை மற்றும் உரிய நேரத்தில் முற்பணம் கிடைக்காமை காரணமாக ஒதுக்கீடு சேமிப்பானது. |

### 2.2 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| 03 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 207,280,181 ஆன வைப்பு மீதிகளை அரச வருமானத்திற்கு செலவு வைக்க அல்லது தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலவதியான வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(3) பிரகாரம் செயற்பட வேண்டியமை. | ஏற்றுக்கொள்கிறேன் |

### 2.3 முற்பணக் கணக்கு மீதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| வேலை நீக்கம் செய்யப்பட்ட 04 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 510,710 ஆன கடன் | தாபன விதிக்கோவை xxiv அத்தியாயம் 4.5 பிரிவு மற்றும் 4.6 பிரிவின் பிரகாரம் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை பிரதான | மீள் நியமிக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்து அக்கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக மற்றும் |

| | | |
|---|---|---|
| மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட அலுவலகத்திற்கு முடியாமல் இருந்தது. | கடனாளியிடமிருந்து அறவிட முடியாத சந்தர்ப்பங்களில் அத்தொகையை அவருடைய பிணையாளியிடமிருந்து அறவிட வேண்டியமை. | அவ்வாறில்லை எனின் பிணையாளியின் சம்பளத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும், ஒழுக்காற்று பரிசோதனையுள்ள அலுவலரிடமிருந்து முன்னரே அக் கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமைகளை மேற்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகதத்தர் கருத்துரை |
|---|---|---|
| தெரனியகல மற்றும் கலிகமுவ பிரதேச செயலகங்களில் விதாதா வள மையங்களின் செயல் திட்டங்களிற்கமைய முறையே 57 மற்றும் 43 வேலைத் திட்டங்கள் வீதம் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதும், வேலைத் திட்டங்கள் முறையே 42 மற்றும் 22 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் குறித்த வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாததுடன் அதற்கு மேலதிகமாக வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். |

**3.2 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக அனர்தமடைந்த கேகாலை மாவட்டத்தின் 24 பாதைகளை புனர் நிர்மாணம் செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டிலிருந்து உரிய தினத்தில் புனர் நிர்மாணப் பணிகளை பூரத்தி செய்யாததனால் ரூபா மில்லியன் 83.4 ஒதுக்கீடு மீதியாகக் காணப்பட்டது. | குறித்த இலக்குகளிற்கு கருத்திட்டங்களை பூர்த்தி செய்து ஒதுக்கீடுகளின் பயன்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2017 ஆம் ஆண்டின் நடைமுறை ரூபா மில்லியன் 83.4 ஆன நடைமுறை வேலைகளில் 2018 ஆண்டில் ரூபா மில்லியன் 19.71 ஆன வேலைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதற்காக 2019 ஆம் ஆண்டிளேயே முற்பணம் கிடைக்கப் பெற்றது. |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்ட போதும் முன்னேற்றம் அடைந்திருக்காத கருத்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம மற்றும் 03 பிரதேச செயலங்களினால் 07 நீர் கருத்திட்டங்களை மேற்கொள்ள தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா மில்லியன் 33.07 ஆன முழுத்தொகையும் விடுவிக்கப்பட்டிருந்தது. அக் கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் 2019 மார்ச் மாதம் வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை | சபையுடன் கலந்துரையாடி அக் கருத்திட்டங்களை கூடிய விரைவில் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக நீர் வழங்கள் சபையுடன் பல விடுத்தங்கள் கலந்துரையாடியதாகவும் அக் கருத்திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்யுமாறு ஆலோசனை வழங்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் கேகாலை மாவட்ட பிரதேச செயலக மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறு அளவிலான 15 புடவை மத்திய நிலையங்களில் 04மத்திய நிலையங்கள் எதிர்பார்த்த மட்டத்தில் செயற்படாததுடன் 11 மத்திய நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. | சந்தைப்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தல், சுற்றறிக்கை ஆலோசனைகளை கடைபிடித்தல், கைத்தொழிற்சாலைகளிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பாக விசாரித்தல் மற்றும் பின் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2018 டிம்பர் 12 திகதி அமைச்சினால் கருத்திட்டத்தை மீள் செயற்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது. அவ் ஆலோசனைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ள காணப்படுகின்ற அசௌகரியங்களாக இயந்திர உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் உரிமையாளர்களினால் கட்டிட வாடகை இது வரை பெற்றுக் கொடுக்காததனால் இயந்திர உபகரணங்களை விடுவிக்க இடமளிப்பதில்லை என வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவித்திருப்பதனால் குறித்த கட்டிடங்களிலிருந்து இயந்திர உபகரணங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 05 மத்திய நிலையங்களில் |

| | | |
|---|---|---|
| | | உபகரணங்கள் தொடர்ந்தும் அவ்வாறே இருப்பதனால் அரச சொத்துக்களுக்கு ஏற்படக் கூடிய வீண்விரயத்தினை கவனத்திற் கொண்டு அமைச்சினால் அனுப்பப்பட்ட 2018 செப்தம்பர் 14 திகதிய கடிதத்தின் ஆலோசனை பிரகாரம் புதிய பயன்பாட்டாளர்களுக்கு அவ்வுபகரணங்ளை ஒப்படைத்து கைத்தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.4 **வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான பிரிவினால் திட்டமிடப்பட்டிருந்த 150 சுற்றிவலைப்புகள், மாவட்ட விவசாய பிரிவினால் திட்டமிடப்பட்டிருந்த 02 கருத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதார பிரிவினால் திட்டமிடப்பட்டிருந்த 05 கருத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | செயற் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ஏற்றுக்கொள்கிறேன் |

**3.5 தேசிய நிதியங்களினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மே மாதத்தில் நாட்டைப் பாதித்த வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வழங்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து, சேதமடையாத 09 பாதைகளை புனர் நிர்மாணம் செய்வதற்கு ரூபா 38,027,134 ஒதுக்கீடு | இலக்கு வைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீட்டுப் பணத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2017 ஆம் ஆண்டில் வெள்ளம் காரணமாக சேதமடைந்த பாதைகளை சபரகமுவ மாகாண சபையின் கேகாலை, ரமுக்கன, மற்றும் தெஹிஓவிட நிறைவேற்று பொறியியலாளர்களின் பரிந்துரைகளுடன் தெரிவு செய்யப்பட்ட பாதைகள் என |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2017 டிசம்பர் வரை அவற்றில் ரூபா 17,542,019 செலவிடப்பட்டிருந்தது. | | பணிவுடன் தெரிவிக்கிறேன். |
| (ஆ) | அனர்த்த முகாமை அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் அனர்த்தங்களை குறைக்கும் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலின் கீழ் தெஹிஓவிட பிரதேச செயலக பிரிவிலுள்ள நாபாவ பள்ளிப் பாதை பக்க மதிலை ரூபா 1,325,709 செலவில் ஒரு வீட்டிற்கு மாத்திரம் பாதுகாப்பு வழங்கக் கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நிறைவு செய்யப்பட்ட வேலை அளவிற்கும் மதிப்பிடப்பட்ட வேலை அளவிற்குமிடையில் பாரிய வித்தியாசம் காணப்பட்ட போதும், அதற்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. | கருத்திடமொன்றை நிறைவேற்ற உரிய மேற்பார்வையுடன் மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டியதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியமை மற்றும் ஏற்பட்டுள்ள முறையீனங்கள் தொடர்பாக விசாரித்து முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளல். | இக் கருத்திட்டம் தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் குறித்த அறிக்கை கிடைத்தவுடன் முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | அனரத்த முகாமை அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் அனர்த்தங்களை குறைக்கும் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலின் கீழ் தெஹிஓவிட பிரதேச செயல பிரிவிலுள்ள திபிரிபொல கனத்த பாதை பக்க மதில் மற்றும் மதகொன்றை நிர்மாணிக்க ரூபா 1,939,616 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட பக்க மதில் மற்றும் மதகிற்கு அப்பால் பாதையொன்று காணப்படாததுடன்,மதகிற்கு அப்பால் காணப்படும் மலைப் பகுதியிலிருந்து வழிந்தோடும் நீர் பாதை வழியே ஓடி இரு புறமும் மண்சரிந்திருந்தது. மதிப்பிடப்பட்ட வேலை அளவிற்கும் நிறைவேற்றப்பட்ட வேலை அளவிற்குமிடையில் பாரிய வித்தியாசம் காணப்பட்டதுடன், அதற்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. வேலை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 142,697 ஆன வேலை | கருத்திடமொன்றை நிறைவேற்ற உரிய மேற்பார்வையுடன் மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டியதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியமை மற்றும் ஏற்பட்டுள்ள முறையீனங்கள் தொடர்பாக விசாரணை ஒன்றை நடாத்தி பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினரிற்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல். | இக் கருத்திட்டம் தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் குறித்த அறிக்கை கிடைத்ததுடன் முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

பகுதி பூர்த்தி செய்யப்படாமல் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.6 பெறுகைகள்**

**------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 31,931,288 பெறுமதியான 5 ஒப்பந்தங்கள் தொடர்பாக கேள்வி மணுக்காப்பு முன்வைக்கப்படவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11 வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | சுற்றறிக்கை பிரகாரம் உரிய பிணை வைப்பினை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. |

**3.7 சொத்துக்கள் முகாமை**

**--------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கேகாலை பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்ட விதாதா வள மையத்திற்கு 2005/2006 ஆண்டுகளில் வழங்கப்பட்ட உளர் இயந்திரம் மற்றும் வெதுப்பக அடுப்புகள் விளைவற்று, துருப்பிடித்துக் காணப்பட்டன. மோடார் சைகில் தலைக்கவசம், கொன்கிரிட் கதவு நிலைகள், கொன்கிரிட் யன்னல் நிலைகள் மற்றும் 4 நாட்காலிகள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது நிலவின. | விளைவற்று நிலவிய சொத்துக்களை பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது உரிய முறையில் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விதாதா வள மையத்தின் பண்டக மெய்மை ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |

**3.8 முகாமைத்துவபலவீனங்கள்**

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| (அ) புலத்கொஹுபிடிய பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள ஹெவனவலஹேன வத்த எனும் காணியில் மண் வெட்டி விற்பனை செய்யும் இடம் தொடர்பாக பரீட்சிக்கையில் ஒப்பந்தத்திற்கு அமைய நிபந்தனைகளை நிறைவேற்றி இருக்காமை, ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளமை,நுழைப ாதையை தூசுகளின்றி பேணாமை, தோண்டப்பட்ட காணியினுள் ஒன்று சேறும் நீரை அகற்ற கால்வாய் தொகுதி ஒன்றை நிர்மாணிக்காமை, அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்கு அமைய அப்புறப்படுத்த முடியுமான மண்ணின் கன அளவு தொடர்பான சான்றுகள் இல்லாமை, சுற்றாடல் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை நிறைவேற்றாமை, மண் அகழ்கையில் அயல் காணி தொடர்பாக கவனம் செலுத்தாததால் அதிக அவதான நிலையிற்குள்ளாகி உள்ளமை, வரம்பு உறுதிபெற புற்பயிர்கள் நடப்படாமை மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல் மேலும் மேற்பார்வை நடவடிக்கைகளில் | குறைபாடுகளிற்கான நிபந்தனைகளை உள்ளடக்கி ஒப்பந்தங்கள் கைசாத்திடப்படல் மற்றும் அவற்றை ஒப்பந்தின் பிரகாரம் செயற்படுத்த வேண்டியமை. | குறித்த இடத்தில் அநுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியதாக மண் அகழ்வு இடம் பெறுவதாக அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் இரத்தினபுரி பிரதேச பூகோல விஞ்ஞானம் மற்றும் அகழ்வாராய்சி நிலையம் 2 சந்தர்பங்களில் 2 கடிதங்கள் மூலம் அறிவூட்டிய போதும், அது தொடர்பாக அந்நிறுவனத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததன் காரணமாக அது தொடர்பாக எனது இலக்கம் BKP/EST/GRAVEL/D4/6 மற்றும் 2019 மார்ச் 01 திகதிய கடிதம் மூலம் பூகோல விஞ்ஞானம் மற்றும் அகழ்வாராய்சி நிலைய பிரதான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவூட்டப்பட்டுள்ளார். அதனை தொடர்ந்து மாவட்ட மண் மற்றும் பரல் அகழ்வு குழுவும் இது தொடர்பாக அறிவூட்டப்பட்டதன் பின்னர் அதனூடாக பூகோல விஞ்ஞானம் மற்றும் அகழ்வாராய்சி நிலைய பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. 2019 மார்ச் 15 திகதிய கடிதம் மூலம் இவ் அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடை |

| | | | |
|---|---|---|---|
| | போதிய ஒருங்கிணைப்பொன்று காணப்படாமை போன்ற குறைபாடுகளாகும். | | நிறுத்த கட்டளை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் தற்போது பூகோல விஞ்ஞானம் மற்றும் அகழ்வாராய்சி நிலையத்தினால் அவ் இடம் தொடர்பாக கூட்டிணைந்த விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன், அங்கு மீறப்பட்டுள்ள அனுமதிப்பத்திர நிபந்தனைகளை சீர்செய்து முன்வைக்கும் வரை தற்காலிகமாக இவ் அனுமதிப்பத்திரத்தை இடை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளமை. |
| (ஆ) | கேகாலை மாவட்டத்தினுள் பல கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 08 பிரதேச செயலகங்களினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய (நீதிமன்ற செயற்பாடுகளுடன் தொடர்பற்ற) 60 கோவைகளின் நடவடிக்கைகள் தேவையற்ற விதத்தில் தாமதிக்கப்பட்டிருந்தன. | குறித்த கருத்திட்டங்களை செயற்படுத்த காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டியமை. | காணிகளை சுவீகரிக்கும் செயற்பாடு பிரதேச செயலம் மற்றும் காணி அமைச்சினால் கூட்டாக நடைமுறைப்படுத்தும் செயற்பாடு என்பதனால் அதன் பிரகாரம் சில பிரிவுகளை செயற்படுத்த குறிப்பிட்ட காலம் செலவிடப்படும். அதே போன்று கோரும் அமைச்சினாலேயே வர்தமாணி அனுப்பப்படுகிறது. இக் காணிகளை சுவீகரிக்கும் இச்செயற்பாடு சிக்கலான காலமெடுக்கும் செயற்பாடாகும். எவ்வாறாயினும் இது தொடர்பாக தனிப்பட்ட முறையில் அவதானித்து காணி அதிகார சட்டத்தின் பிரகாரம் சுவீகரிக்கும் செயற்பாடுகளின் தாமதங்கள் தடுக்கப்பட்டுள்ளது. சில காணிகள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை, எதிர்ப்பு தோன்றியமை போன்ற காரணங்கள் தாமதத்திற்கு தாக்கம் செலுத்தியுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 11 பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள சபரகமுவ மாகாணசபைக்கு சொந்தமான 105 ஏக்கர் 2 ரூட் 12.5 பசர்ஸ் அளவைக் கொண்ட 65 பாடசாலை காணிகள் 01 முதல் 25 வருட வீச்சலவான காலத்தினுள் மூடப்பட்டிருந்தன. அவற்றில் 17 பாடசாலைகளின் வளங்கள் மாத்திரம் வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. மீதி வளங்களை பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இக் காணிகளின் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு காணிகளை பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பலதரப்பட்ட காரணங்களினால் மாவட்டத்தினுள் சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பிரதேச செயலாளரின் பொறுப்பிளுள்ள இச்சொத்துக்களை பொது வேலைகளுக்கு பயன்படுத்த வேண்டிய போதும், அதற்காக இது வரை கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சி நிரல் - 2030’’ மற்றும் 2017 இலக்கம் 19 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி சட்டம் பிரகாரம் பிரதேச செயலகம் ஒவ்வொறு பிரிவுகளினூடாக செயற்படுத்தப்பட வேண்டிய நோக்கங்கள், இலக்குகள் மற்றும் செயலாற்றுகை குறிகாட்டிகளை குறிப்பாக இனங்கண்டு அவற்றை செயல் திட்டத்திற்கு உற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை செயற்படுத்துவது தொடர்பாக குறித்த பிரிவுகளுக்கு அனுப்பப்பட வேண்டியமை. | ஒவ்வொறு பிரிவுகளினூடாக செயற்படுத்தப்பட வேண்டிய நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் சம்பந்தமாக இனங்கண்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக கணக்காய்வினால் விடயங்களாக காட்டப்படுமானால் முன்னே மிகவும் சரியான செயல் திட்டமொன்றை தயாரிக்க முடியுமாக இருக்கும். |

**5. நல்லாழுகை**

-------------------

**பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

---------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை** |
|---|---|---|
| தெரனியகல மற்றும் ருவன்வெள்ள பிரதேச செயல பிரிவுகளில் அனர்த்தம் காரணமாக அதிக அவதானத்திற்கு உட்பட்ட 32 குடும்பங்களிற்காக நீர் வசதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் படி அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அங்ஹெட்டிகம துன்மாயிம தோட்டக் காணியில் நீர் கருத்திட்டமொன்றிற்காக இது வரை ரூபா 4,742,797 ஆன அன்னளவான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளதுடன் ஒதுக்கீடு கிடைத்த உடனே நீர் வசதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். ருவன்வெள்ள பிரதேச செயலத்தின் நீர் கருத்திட்ட நடவடிக்கைகள் நீர் வழங்கல் சபையினால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

6. **மனித வள முகாமை**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 2017 நவம்பர் 02 திகதியன்று புதிய ஆளணி அறிக்கை பிரகாரம் மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், 2019 மார்ச் வரையும் அப்பதவிக்கான அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொறு பிரிவுகளினதும் வெற்றிடங்களை அவ்வப் போது நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இங்கு குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்த ஊழியர் புள்ளிவிபர அறிக்கைகளினாலும் அதற்கு மேலதிகமாக எழுத்து மூல கோரிக்கைகளினாலும் வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறு அமைச்சின் செயலாளருக்கு அவ்வப்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ருவன்வெள்ள மற்றும் புலத்கொஹுபிடிய பிரதேச செயலகங்களிற்கு விவசாய அமைச்சிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் மூவர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு சம்பளம் மற்றும் பிரயாணச் செலவுப் படிகளாக முறையே ரூபா 1,019,241 மற்றும் ரூபா 1,334,296 ஆண்டினுள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் விவசாய பிரிவிற்குரிய நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்படாததன் காரணமாக அதற்குரிய எவ்வித வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விஷேட செயற்பாடுகளிற்கென தொடர்புபடுத்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய வேலை நடவடிக்கைகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அமைச்சினால் குறித்த கடமை பட்டியலொன்று இவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் வேலை திட்டங்களை ஒழுங்குபடுத்த ஒதுக்கீடு வழங்குகையும் செய்யப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. |